**06.12.2024**

**அ.வ.எண்.274/2012**

**<u>பி.சா.1 சத்யராஜ் அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பி.சா.ஆ.1தான் அந்த ஆவணமா என்றால் ஆமாம். பி.சா.ஆ.1ல் மத்தேயு மகன் ஞானகண்ணு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஞானகண்ணு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் உள்ள தாவா சொத்திற்கான அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.2 அ பதிவேடு என்றால் சரிதான். பி.சா.ஆ.2ல் மத்தேயு மகன் ஞானகண்ணு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் உள்ள தாவா சொத்திற்கான சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.5ல் நான் கூறிய சிட்டா உள்ளதா என்றால் ஆமாம். அந்த சிட்டாவை மத்தேயு மகன் ஞானகண்ணு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஞானகண்ணு தாவா சொத்திற்கு வரி செலுத்தியுள்ளரா என்றால் எனக்கு தெரியாது. ஞானகண்ணு பெயரில் உள்ள வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான் வரி ஏதும் செலுத்தியதில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததால்

வரி செலுத்தி வந்தேன். மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் உள்ள கிரையம் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் தாவா சொத்திற்கான பாகபிரிவினை பத்திரம், உயில் அல்லது செட்டில்மெண்ட் பத்திரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஞானகண்ணு பெயரில் பட்டா இருந்ததால் அது குறித்து நான் கேட்கவில்லை. ஞானகண்ணு பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் மட்டும்தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். மத்தேயு மகன் ஞானகண்ணுவிற்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்றாலும் அவரிடமிருந்து கிரையம் வாங்கியதால் எனக்கு கிரையப்பத்திரம் செல்லாது என்றாலும் சரியல்ல. ஞானகண்ணு பயிர் வைத்ததன் அடிப்படையில் நான் அவரிடமிருந்து கிரையம் வாங்கினேன்.

4. தாவா சொத்தின் 4 பக்க எல்லைகளை எங்களுக்கு சொந்தமான சொத்துகள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள ரோட்டிற்கு அருகில் எனது தாத்தாவின் நிலம் உள்ளது. தாவா சொத்திற்கு எந்த பக்கம் சாலை உள்ளது என்றால் கிழக்கு பக்கம். மேற்கு பக்கம் ஏரிக்கரை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் எங்கள் சொத்து இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு

பக்கம் மத்தேயு மகன் ஞானகண்ணுவிற்கு சொந்தமான சொத்துகள் எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. தாவா கிராமத்தில் நான் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் எனது தாத்தாவின் முன் தலைமுறை முதல் தாவா கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறேன்.

5. தாவா சொத்தின் சர்வே எண் 15/1பி4. அதன் வடக்கு பக்கம் சர்வே எண்.15/1பி3 என்றால் சரிதான். தாவா சர்வே எண். 15/1பி4 க்கு கணினி வழிப்பட்டா செல்லமுத்து மகன் ஞானகண்ணு பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சர்வே எண்.15/1பி3 னை வாதி செல்லமுத்து மகன் ஞானகண்ணுவின் வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. செல்லமுத்து மகன் சாமிதாஸ் வாரிசுகளிடமிருந்து வாதி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றாலும் தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. சர்வே எண்.15/1பி3 1 ஏக்கர் 30 செண்ட் வாதி கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ.13 ல் கண்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரையதாரரான ஞானகண்ணு தற்போது உயிருடன் இல்லை. ஞானகண்ணுவின் வாரிசு பெயர் தாவீது. தாவா சொத்தினை வாதி அவரது கிரையதாரரிடமிருந்து கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ.4 ல் கண்டுள்ளது என்றால் சரிதான். அதே கிரையதாரர்கள் வாதிக்கு சர்வே

எண்.15/1பி3 னை வா.சா.ஆ.13 முன்னிலைக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.13 ல் குறிப்பிட்டுள்ள சொத்துகள் சம்பந்தமாக எனது கிரையதாரர்களான ஞானகண்ணு மற்றும் அவரது வாரிசு தாவீது நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. உண்மையிலே தாவா சொத்திற்கும் அதற்கு வடக்கு பக்கம் உள்ள சர்வே எண்.15/பி3 க்கும் எனது கிரையதாரர் ஞானகண்ணுவிற்கு உரிமை இருந்திருந்தால் அவர் வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றாலும் உரிமை இல்லாததால்தான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

8. 17.03.2010 அன்று நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கினேன். எவ்வளவு கிரையத்தொகை என்றால் 1,99,500 ரூபாய். நான் தற்போது கார்ப்பரேசனில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மாத சம்பளம்தான். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எந்த வருடத்திலிருந்து நான் பணி புரிந்து வருகிறேன் என்றால் 2019 ம் வருடத்திலிருந்து. அதற்கு முன் ஆலிவ் இமேஜ் பிரைவேட் லிமிடெட் கம்பெனியில் 2008 ம் வருடம் முதல் 5 வருடம் வேலை செய்தேன். எனக்கு அப்போது மாதம் ரூ. 16,000 சம்பளம். அதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த நிறுவனம் மூடி விட்டதால் ரசீது ஏதும் இல்லை. அந்த சமயத்தில் எனது செலவு போக எவ்வளவு தொகை மீதம்

இருக்கும் என்றால் அப்போது எனது தாயார் கார்ப்பரேசனில் பணிபுரிந்து வந்ததால் எனது செலவுகள் அனைத்தையும் அவர்தான் பார்த்துக்கொள்வார். எனது சம்பளத்தை செலவு செய்ய வேண்டிய அவசியம் எனக்கில்லை.

**9**. எனது சேமிப்பு தொகையினை வங்கி கணக்கில் வைத்துள்ளேனா என்றால் இல்லை. சம்பளத்தொகை நேரடியாக கொடுப்பதால் கையில்தான் வைத்திருந்தேன். தாவா சொத்து செண்டுக்கு எவ்வளவு நிர்ணயம் செய்து கிரையம் வாங்கினேன் என்றால் செண்ட் அளவுக்கு நிர்ணயம் செய்யவில்லை. அருகில் இருக்கும் நிலத்தின் விலை வைத்து வாங்கினேன். பொதுவாக செண்ட் அளவிற்கு தொகை நிர்ணயம் செய்து கிரையம் வாங்குவார்கள் என்றால் நாங்கள் செண்ட் கணக்கில் வாங்கவில்லை. பொதுவாக வாங்கினோம்.

**10**. உண்மையிலே நான் கிரையம் வாங்கியிருந்தால் தாவா சொத்தை செண்ட் கணக்கில் விலை நிர்ணயம் செய்து நான் கிரையம் வாங்கியிருப்பேன் என்றாலும் வாதி சொத்தை அபகரிக்க வேண்டும் என்று பொய்யாக ஒரு கிரையம் ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதியின் கிரையதாரரின் பூர்வீக சொத்து என்றாலும் அதில் ஞானகண்ணுவிற்கும் அவரிடமிருந்து கிரையம் வாங்கிய எனக்கும் உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பத்தில் முனுசாமி என்கிற செல்லமுத்துவிற்கு சொந்தமான சொத்து என்றாலும்

அவர் இறந்தபிறகு அவரது வாரிசுகளான ஞானமுத்து என்கின்ற ஞானகண்ணு அனுபவித்து வந்தார் என்றாலும் சரியல்ல. அவரது பெயர் ஞானமுத்து மட்டும்தான்.

**11**. ஞானமுத்து என்கின்ற ஞானகண்ணு **1985** ம் வருடம் இறந்தபிறகு அவரது வாரிசுகளான சாமிதாஸ் தாவா சொத்தினை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. சாமிதாஸ் தாவா சொத்தை அனுபவித்து வந்ததற்கு வா.சா.ஆ.**3** வரி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தினை சாமிதாஸ் அனுபவிக்கவில்லை. சாமிதாஸ் **1988** ம் வருடம் இறந்தபிறகு அவரது வாரிசுகளான ரவிசந்திரன், அன்னமுத்து, செல்வகுமார் ஆகியோர்கள் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு அவர்கள் **2009** ம் வருடம் வாதியிடம் கிரையத்தொகை பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.**4** கிரையபத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

**12**. அதன்பிறகு தற்போது வரை வாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான பழைய சர்வே எண்ணிற்கான பட்டா சாமிதாஸ் பெயரில் உள்ளது என்றாலும் அதற்காக வரி செலுத்தியுள்ளார் என்றாலும் நான் வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லாமல் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் உண்மையான உரிமையாளரிடமிருந்து வாதி கிரையம் வாங்கியதால்

அவரது கிரைய ஆவணங்கள் செல்லதக்கதல்ல என்று நான் கோருகின்ற எதிர் கோரிக்கை நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**13**. மத்தேயு மகன் ஞானகண்ணு பெயரில் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள், மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லாதபோது நான் அவரிடமிருந்து கிரையம் வாங்கியதாக கூறும் எனது கிரைய பத்திரம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியபடி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.